# கப்பளாம்பாடி ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு.பெ.ராமசாமி,

ஆணை எண்.2/2024 நாள்:24.01.2024

பொருள் : மனைப்பிரிவு – மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம் – கப்பளாம்பாடி ஊராட்சி –கப்பளாம்பாடி கிராமம் – சர்வே எண். 81/2A–ல் 1.828 ஏக்கர் (அ) 7400 சதுர மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு குடியிருப்பு மனைப்பிரிவிற்கான ஒப்புதல் வரப்பெற்றது – இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடுதல் – சார்பு.

பார்வை :
1. அரசாணை நிலை எண். 18 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020.
2. அரசாணை நிலை எண். 138 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:04.06.2004.
3. அரசாணை நிலை எண். 79 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:04.05.2017.
4. அரசாணை நிலை எண். 141 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை UD4(3) நாள்:23.09.2020.
5. அரசாணை நிலை எண். 181 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை UD4(1) நாள்:09.12.2020.
6. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் ந.க.எண்: 14726/2023/TCP நாள்: 12.10.2023.
7. அரசு கணக்கில் நில பயன்மாற்ற கட்டணம் செலுத்திய நாள்: 20.12.2023 மற்றும் கூராய்வு கட்டணம் கப்பளாம்பாடி ஊராட்சி செலுத்திய நாள்:24.01.2024
8. கப்பளாம்பாடி ஊராட்சி தீர்மான எண்: 39 நாள்: 14.12.2023.

உத்தரவு.

பார்வை 1 முதல் 5 வரை உள்ள அரசாணைகளில் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் பார்வை 6–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் கடிதத்தின்படி மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், கப்பளாம்பாடி ஊராட்சி கப்பளாம்பாடி கிராமம் சர்வே எண். 81/2A–ல் 1.828 ஏக்கர் (அ) 7400 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனைபிரிவிற்கு ஒப்புதல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | மனை அமைவிடம் | மனை எண் மற்றும் பரப்பளவு |
|---|---|---|
| 1 | கப்பளாம்பாடி ஊராட்சி<br>கப்பளாம்பாடி கிராமம் –<br>சர்வே எண். 81/2A<br>மேல்மலையனூர் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | பரப்பளவு:7400 சதுர மீட்டர் |

கட்டணங்கள் விபரம்:

பார்வை 7–ல் காணும் அசல் செலுத்து சீட்டு மூலம் கீழ்கண்டவாறு கட்டணங்கள் உரிய அரசு தலைப்பில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை 8–ல் காணும் கப்பளாம்பாடி ஊராட்சி தீர்மானம் எண்: நாள்: .12.2023–ன்படி மனைப்பிரிவினை அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

| வ. எண் | செலுத்தப்படவேண்டிய கட்டண விபரங்கள் | செலுத்தப்பட்ட கட்டண விபரங்கள் |
|---|---|---|
| 1 | அரசு கணக்கில் நில பயன்மாற்ற கட்டணம் இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகை ரூ.9500/– | 0217-Urban Development 60 – Urban Development scheme 800 – Other receipts AS – Receipts under Land use Conversion Charges – 27 Non taxation fees – 09 collections (DPC: 0217-60-800-AS-2709) Amount Rs.9500/- Date:20.12.2023 SBI Melmalayanur Chellan No. 20231220022851 |
| 2 | கூராய்வு கட்டணம் கப்பளாம்பாடி ஊராட்சி செலுத்திய தொகை ரூ.41,000/– | கப்பளாம்பாடி ஊராட்சியில் வளர்ச்சி கட்டணமாக ரூ.41,000/– செலுத்திய நாள்:24.01.2024 |

நிபந்தனைகள்:

1. உள்ளாட்சித்துறை வரன்முறை அளிப்பதன் மூலம் விண்ணப்பத்தாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. விண்ணப்பத்தாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், வில்லங்கம் மற்றும் பல) விண்ணப்பத்தாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
2. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். இதனை முடிவு செய்ய உள்ளாட்சித் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

3. இதில் அபிவிருத்திகள் எதுவும் மேற்கொள்வதாக இருப்பின் உரிய அனுமதி பெறவேண்டும். மேலும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்.

4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைக்கு ஒப்புதல் அங்கீகாரம் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்புமின்றி ஊராட்சி மன்றத்தலைவர், கப்பளாம்பாடி அவர்களால் இரத்து செய்யப்படும்.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம் கப்பளாம்பாடி ஊராட்சி கப்பளாம்பாடி கிராமம் சர்வே எண். 81/2A—ல் 1.828 ஏக்கர் (அ) 7400 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவில் அமைந்துள்ள 1 முதல் 41 வரையிலான மனைகளுக்கு மட்டும் இறுதி ஒப்புதல் அளித்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

P. ராமசாமி
தலைவர்
கப்பளாம்பாடி ஊராட்சி
மேல்மலையனூர் ஒன்றியம்
ஊராட்சி மன்றத்தலைவர்
கப்பளாம்பாடி ஊராட்சி

பெறுதல்:
திரு.G.ரவிகுமார்,
த/பெ.கோபாலகிருஷ்ணன்
கதவு எண்.5/158 ரெட்டியார் தெரு,
கப்பளாம்பாடி கிராமம்,
மேல்மலையனூர் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்

நகல்: மாவட்ட ஆட்சித்தலைவர், (ஊராட்சிகள்) விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல்: நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல்: சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், அவலூர்பேட்டை தகவலுக்காக.

நகல்: இளமின் பொறியாளர்(இயக்குதலும் & பராமரித்தலும்) தமிழ்நாடு மின்சார வாரியம், அவலூர்பேட்டை தகவலுக்காக.